இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (இரண்டாம் ஐ-வீதி) - 2024

இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நவம்பர் 22 ஆம் திகதிய 3579 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க மற்றும் 3580 எஸ்ஆர்ஐ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகள் மற்றும் 2019 நவம்பர் 13 ஆம் திகதிய 3851 எஸ்ஆர்ஐ மற்றும் 2021 மே 28 ஆம் திகதிய 4067 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2023 நவம்பர் 28 ஆம் திகதிய 4384 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டக் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பது நீண்டகால விளைவாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 165,185 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,084.60 மில்லியனானதுடன் அதில் ரூபா 137,070 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 900 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 28,115 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. நன்கொடையாளர் ஐ.அ.டொலர் 900 மில்லியனில் ஐ.அ.டொலர் 500 மில்லியனை மூன்று தவணைகளாக அவர்களின் வழக்கமான வழங்கல் முறையின்படி விடுவித்திருந்ததுடன் பொருளாதார நெருக்கடியின் விளைவாக செயலாக்கம் நிறுத்தப்பட்டது. பின்னர், ஏற்கனவே தொடங்கப்பட்ட மற்றும் முடிக்கப்படாத வீதிப் பிரிவின் முக்கியமான பணிகளை மேற்கொள்வதற்கும், ஐ - வீதி மற்றும் இரண்டாம் ஐ - வீதி நிகழ்ச்சித்திட்டங்களில் செய்யப்பட்ட முந்தைய பணிகளுக்கான கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கும் இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் நிகழ்ச்சித்திட்டத்தின் 4வது பகுதியின் கீழ் மேலும் ஐ.அ.டொலர் 60 மில்லியனை வழங்க முடிவு செய்யப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 யூலை 20 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2027 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து நிகழ்ச்சித்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை கள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்கீட்டுக் குறைபாடுகள்	தொகை ரூபா மில்லியன்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	பொறியியலாளரால் சான்றளிக்கப்பட்ட ரூபா.161.36 மில்லியன் பெறுமதியான சான்றிதழ்கள் தொடர்பான இடைக்கால கொடுப்பனவுகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு செலுத்த வேண்டியவையாகக் கணக்கிடப்படவில்லை. இதன் விளைவாக, ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு செலுத்த வேண்டியவை மற்றும் செயன் முன்னேற்றத்தில் அதே அளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	161.36	எதிர்கால நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.	கணக்காளர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிடல் கட்டமைப்பிற்கு இணங்குவதை உறுதி செய்ய வேண்டும்.
(ஆ)	செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் பணம் மற்றும் சிவில் வேலை ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் பணம் இரண்டிலும் ரூபா.216.68 மில்லியன் பிடித்துவைத்தல் பணம் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் செயன் முன்னேற்றம் அதே அளவு அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	216.68	இது JE/25/67 ஆம் இலக்க நாட்குறிப்பினூடாக 2025 இல் திருத்தப்பட்டது.	கணக்காளர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிடல் கட்டமைப்பிற்கு இணங்குவதை உறுதி செய்ய வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் ஒப்பந்தப் பதிவேட்டில் சேர்க்கப்பட்ட 03	40.09	இந்த ஐபிசி கொடுப்பனவுகளுக்கு	கணக்காளர் நிதிக்கூற்றுக்களின்

	ஒப்பந்தப் பொதிகளுடன் தொடர்புடைய ரூபா.40.09 மில்லியன் பெறுமதியான 3 இடைக்கால கட்டணச் சான்றிதழ்களின் (IPCṡ) பொறியாளர் சான்றளிக்கப்பட்ட பெறுமதி கணக்கிடப்படவில்லை. இதன் விளைவாக, செயன் முன்னேற்றம், மத்திய வங்கி (CB) செலுத்த வேண்டிய தொகை மற்றும் பிடித்துவைத்தல் ஆகியவை முறையே ரூபா.40.09 மில்லியன், ரூபா.28.08 மில்லியன் மற்றும் ரூபா.3.83 மில்லியனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.		குறிப்பிடப்பட்ட சிபி விண்ணப்பங்கள் திறைசேரி செயல்பாட்டுத் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.	உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 05 இன் பந்தி 43(அ) இன் படி, ஒவ்வொரு நிதி நிலை அறிக்கைக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நிதி நிலைமை அறிக்கையின் திகதியிலுள்ள இறுதி அந்நிய செலாவணி விகிதத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இருப்பினும், மேற்கண்ட தேவைக்கேற்ப நிதி நிலைமைக் கூற்றில் செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய சமநிலை சரிசெய்தலை கணக்கிட்டு சரிசெய்யவோ அல்லது வெளிப்படுத்தவோ இல்லை.	-	அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி, செயற்திட்ட நிதிநிலைமைக் கூற்றுக்களில் சமநிலை மாறுபாட்டை சரிசெய்வது அவசியமில்லை	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுங்கள்.
(உ)	கிரயக் கோரிக்கைக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா.14,087.80 மில்லியன் ஏற்பாடொன்று பொறியியளாலரால் நிராகரிக்கப்பட்டது. மேலும், நிதிக்கூற்றுக்களில் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையாகக் கணக்கிடப்பட்ட மீதமுள்ள கிரயக் கோரிக்கைகள் ரூபா. 3,489.50 மில்லியன் தொடர்பிலான கணக்காய்வில் தற்போதைய கடமையின் உறுதிப்பாடு உறுதிப்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக, ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை அதே அளவு அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	14,087.80	சிவில் பணி ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய ஏற்பாடாக தவறுதலாக பதியப்பட்ட பொறியியளாலரால் நிராகரிக்கப்பட்ட கிரயக் கோரிக்கைகள் JE/25/68ஆம் இலக்க நாட்குறிப்பினூடாக 2025 இல் திருத்தப்பட்டது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டதின் 38 (1)(இ) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வு மேற்கொள்ளும் போது விசேட கவனம் செலுத்தப்படவேண்டிய துடன் எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

(ஊ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் பந்தி 22 இன் படி, ஏற்பாடு தற்போதைய கடப்பாட்டுக்கு மட்டுமே அங்கீகரிக்கப்பட வேண்டும். கடனைத் தீர்க்க பொருளாதார நன்மைகள் அல்லது சேவை திறனை உள்ளடக்கிய வளங்களின் வெளியேற்றம் தேவைப்படும் வாய்ப்பு உள்ளது, மேலும் கடனின் அளவு குறித்து நம்பகமான மதிப்பீட்டைச் செய்ய முடியும். இருப்பினும், தகராறு தீர்ப்பு வாரியம் (DAB) மற்றும் நடுவர் கோரிக்கைகள் என ரூபா. 907 மில்லியன் மதிப்புள்ள ஏற்பாட்டின் துல்லியத்தை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை, ஏனெனில் தொடர்புடைய தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை.	907.00	இந்த ஒப்பந்தகாரர் பணிநீக்கம் மற்றும் இணை உரிமைகோரல்களுக்கு எதிராக உரிமை கோருகிறார். நடுவர் மன்றம் நடந்து கொண்டிருக்கிறது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுங்கள்.
(எ)	வசூலிக்கப்படாத ஆரம்ப முற்பணமாக ரூபா. 1,201.37 மில்லியனை சந்தேகத்திற்குரிய அறவீடுகளாக தனித்தனியாகக் குறிப்பிட வேண்டும். இருப்பினும், இது ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு செலுத்த வேண்டியதாகக் கணக்கிடப்பட்டது. எனவே, ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் செயன் முன்னேற்றம் அதே அளவு அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	1,201.37	நிறுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் வசூலிக்கப்படாத ஆரம்ப முற்பணத்திற்கான ஒதுக்கீடு தனித்தனியாகக் கணக்கிடப்பட்டது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுங்கள்.
(ஏ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் பந்தி 97 மற்றும் 98 இன் படி , கடப்பாட்டின் தன்மை போன்றவற்றின் சுருக்கமான விளக்கம் வெளியிடப்பட வேண்டும். இருப்பினும், தாமத வட்டிக்கு ரூபா.571.96 மில்லியன் வழங்குவது தொடர்பான தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் செய்யப்படவில்லை	571.96	2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சிவில் பணிகள் இடைநிறுத்தப்பட்டன, மேலும் போதுமான நிதி இல்லாததால் பல IPC கொடுப்பனவுகள் நிறுத்தி வைக்கப்பட்டன.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்கள் வேண்டப்படுகின்றது.

2.2 சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	2020 பெப்ரவரி 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை.	மாகாண அறிக்கைகளுடன் கூடிய நிகழ்ச்சித்திட்டத்தால் நடாத்தப்பட்ட பொருள் கணக்கெடுப்பு சபை தொடர்பான அறிக்கையை அடுத்த ஆண்டு யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், மீளாய்வண்டிற்கான தொடர்புடைய அறிக்கை 2025 யூலை 09 அன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.	பொருள் கணக்கெடுப்பு சபை பூர்த்திசெய்யப்பட்டதுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.	சுற்றறிக்கைக்கிணங்க பொருள் கணக்கெடுப்பு சபை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு	செயற்திட்ட வழிநடாத்தல் குழு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும். எனினும்,மீளாய்வாண்டின் போது ஒரேயொரு கூட்டம் மாத்திரம் நடைபெற்றிருந்தது.	வழிநடாத்தல் குழுவின் இரண்ட கூட்டங்கள் 2024 ஆகஸ்ட் 02 மற்றும் 2024 நவம்பர் 08 இல் நடாத்தப்பட்டிருந்தது.	பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கிணங்க செயற்திட்ட வழிநடாத்தல் கூட்டம் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
(இ)	2019 சனவரி 12 ஆம் திகதிய டீஎம்ஏ/01/2019 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை	செயற்திட்ட உள்ளக கணக்காய்வு மீளாய்வுக் குழு நிறுவப்பட வேண்டுமென்பதுடன் ஆண்டுதோறும் குறைந்தது 04 கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிலிருந்து ஒரே ஒரு கூட்டம் மட்டுமே நடத்தப்பட்டுள்ளது.	ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி ரத்து செய்யப்பட்டது. எனவே, செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடு முறையாகச் செய்யப்படவில்லை.	பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கிணங்க செயற்திட்ட உள்ளக கணக்காய்வு மீளாய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

கூறு	**செயற்பாடு**	**2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**		**கணக்காய்வு விடயம்**	**தாமதங்களிற்கான காரணங்கள்**
		எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்	**அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்**		
		கிமீ	**கிமீ**		
தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்தல்.	தேசிய மற்றும் கிராமிய வீதிகள	340 கிமீ 3400 கிமீ	120.31 கிமீ 2,447.21 கிமீ	நிகழ்ச்சித்திட்டத்தினால் 340 கிமீ தேசிய வீதிகள் மற்றும் 3400 கிமீ கிராமிய வீதிகளில் முறையே 120.31 கிமீ தேசிய வீதிகள் மற்றும் 2,447.21 கிமீ கிராமிய வீதிகளை மாத்திரமே 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	ஓப்பந்தகாரர்களில் பலர் அவர்களுடைய வேலையை நிறுத்தியமை ஓப்பந்தகாரின் மந்தமான செயற்பாடு ஓப்பந்த கொடுப்பனவுகளில் ஏற்பட்ட காலதாமதம் மந்தமான செயற்பாட்டின் பிரதான பங்களித்திருந்தது.

முகாமைத்துவத்தின் பதில் இணங்கப்பட்டது

கணக்காய்வாளரின் பரிந்துரை செயற்திட்டம் முறையான செயல் நடவடிக்கைத்திட்டத்தையும் பாதீட்டையும் தயாரித்து அதற்கேற்ப பொறுப்புகளையும் நிர்ணயிக்க வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 38(1)(இ) இன் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வில் அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட வேண்டும்.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

கணக்காய்வு விடயங்கள்	**முகாமைத்துவத்தின் பதில்கள்**	**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்**
(அ) ஒப்பந்தத்தின் நிபந்தனையின்படி, ஆரம்ப முற்பண பிணைகள் மற்றும் செயல்திறன் பிணைகளைப் பணமாக்குவது தொடர்பாக பீஎம்யூ மேலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவரங்கள் பின்வருமாறு.		
(i) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, 06 நிறுத்தப்பட்ட பொதிகளிலிருந்து	பல பிணைகள் பணமாக்கப்பட்டன, மேலும்,	முற்பணப் பிணைகளை பணமாக்க உடனடி

	ரூபா.1,445.06 மில்லியன் தொகையான ஆரம்ப முற்பணங்களை காசாக்குவது தொடர்பான கோரிக்கைகளை நிகழ்ச்சித்திட்டம் வங்கியிடம் சமர்ப்பித்திருந்தது. இருப்பினும், ஒப்பந்ததாரர்கள் அந்தப் பிணைகளை காசாக்குவதற்கு எதிராக நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றதால், வங்கிகள் பிணைகளை காசாக்கவில்லை.	வழக்குகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக நடுவர் மன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டன.	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் பொறுப்பான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
	(ii) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 பொதிகளில் ரூபா.885.75 மில்லியன் தொகையான நிலுவையிலுள்ள் முற்பணங்கள் தொடர்பான மீட்புகள் இந்த ஆண்டில் ஏற்படவில்லை.	இதில், ரூபா. 37.73 மில்லியன் தொகை மீட்கப்பட்டதுடன் பிற ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புடைய பிணைகள் இன்னும் செயல்பாட்டில் உள்ளன.	முற்பண முறிகளை பணமாக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுக்காக பணிகளை முடிக்க ஒப்பந்ததாரருக்கு கால நீடிப்பு (EOT) உரிமை உண்டு. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.		
	(i) ஒப்பந்ததாரர் மூல ஒப்பந்த காலம் முடிவதற்குள் அல்லது முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட EOT திகதிக்கு முன் EOTக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றாலும், 2024 ஆம் ஆண்டு வரை தொடர்ந்த 19 ஒப்பந்தங்களில் ஒப்பந்ததாரர்கள் EOTக்கு 09 நாட்கள் முதல் 889 நாட்கள் வரை தாமதாமதத்துடன் விண்ணப்பித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.	ஒப்பந்ததாரர்கள் ஆவணங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம், EOTகளில் குறிப்பிடத்தக்க தாமதங்களை ஏற்படுத்தியது.	ஒப்பந்த நிபந்தனைகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.
	(ii) மூல ஒப்பந்த காலம் அல்லது முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட EOT காலம் முடிவதற்கு முன்பே EOT அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றாலும், மீளாய்வாண்டில் தொடர்ந்த 7 ஒப்பந்தங்களில், பொறியாளரால் EOT அனுமதியானது 129 நாட்கள் முதல் 732 நாட்கள் வரை தாமதத்துடன் தாமதமானமை அவதானிக்கப்பட்டது. மேலும், பொறியியலாளரின் அனுமதிக்காக வழங்கப்பட்ட மீதமுள்ள 12 ஒப்பந்தங்களில் EOTகள் 2025 மே 31 வரை அங்கீகரிக்கப்படவில்லை.	ஒப்பந்ததாரர்கள் ஆவணங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம், EOTகளில் குறிப்பிடத்தக்க தாமதங்களை ஏற்படுத்தியது.	ஒப்பந்த நிபந்தனைகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.
(இ)	2023 யூலை 13 ஆம் திகதிய பொது செலவீன மீளாய்வு குழுவின் (பீர்ஆர்சீ)	இது தொடர்பிலான விபரமான அறிக்கைகள்	குழு சிபாரிசுகளுடன் இணங்குவதுடன் குழு

	4.1.6 ஆம் பரிந்துரைகளின் பிரகாரம் முன்வரும் இடைக்கால காலப்பகுதியின் போது இடைநிலை வரையிலும் நிகழ்சித்திட்டத்தால் ஏற்கனவே தொடங்கப்பட்ட புனரமைப்பு வேலையை பூர்த்தி செய்வதற்கு குழுவிற்கு சிபாரிசு செய்யப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் வீதி வாரியான முன்னேற்றத்தின்படி, முக்கியமான பணிகள் திட்டத்தில் சேர்க்கப்படாத 520 கிராமிய வீதிகள் மற்றும் 26 தேசிய வீதிகள் தொடர்பான ஒப்படைத்தல் விவரங்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை.	இரண்டு வாரங்கள் காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்படும்.	சிபாரிசுகளுடன் இணங்காமை தொடர்பாக விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்பதுடன் புதிய அனுமதி பெறப்பட் வேண்டும்.
(ஈ)	2023 மார்ச் 31 இல் உள்ளவாறான முன்னேற்ற அறிக்கையின்படி 91 வீதிகள் முழுமையாக முடிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்டாலும், அந்த வீதிகள் 2024 சனவரி 01 அன்று அங்கீகரிக்கப்பட்ட முக்கியமான பணித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.	சம்பந்தப்பட்ட மாகாண அலுவலகங்களுடன் சரிபார்க்க வேண்டியது அவசியம். இது தொடர்பான விரிவான அறிக்கை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும்	முக்கிய பணித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு முன் முறையான மதிப்பீடு நடத்தப்பட வேண்டும்.

3.3 செயற்திட்ட நோக்கங்களுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

இல	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	ரூபா 94.03 மில்லியன் திரண்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்படாத கடன் பெறுவனவுகளில் கடன் வழங்கும் முகவராண்மைக்கு சிக்கனமற்ற முறையில் நிகழ்ச்சித்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.	திட்டமிடப்பட்ட காலத்திற்குள் பகுதிகளைப் பயன்படுத்துவதன் மூலம், கடப்பாட்டுக் கட்டணத்தைக் குறைக்க முடியும்.	நிகழ்ச்சித்திட்டம் சரியான செயல்நடவடிக்கைத் திட்டத்தை மற்றும் பாதீட்டை தயாரிக்க வேண்டுமென்பதுடன் கடப்பாட்டுக் கட்டணங்களைக் குறைக்க அதற்கேற்ப பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டதின் 38 (1)(இ) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வு மேற்கொள்ளும் போது அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

(ஆ)	ஒப்பந்தங்களின் விசேட நிபந்தனைகளின் 108.4 மற்றும் 120.7 ஆம் உட்பிரிவுகளின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் அனைத்து ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்கள் ஒப்பந்ததாரருக்குத் திருப்பியளிக்கப்படும் என்ற போதிலும் ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்களுக்காக ரூபா 518.99 மில்லியன் மற்றும் ரூபா 14.13 மில்லியன் மொத்த தொகையாக செலுத்தப்பட்டுள்ளது. இதனால் சாதகமான ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நன்மைகளை ஏற்படுத்தலாம்.	இந்த முறைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட செலவீனம் ஒப்பிடக்கூடியரீதியில் குறைவாகவுள்ளத. ஆர்டிஏ ஆனது தற்போது போதியளவு ஆய்வுகூட உபகரணங்களையும் அத்தகைய உபகரணங்களுக்கான போதியளவு களஞ்சியத்தையும் கொண்டிருக்கவில்லை.	ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனை ஒழுங்கான முறையின் அமுல்படுத்த முன்னர் மீளாய்வு செய்யப்படவேண்டும். ஊழியர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் பெறுகைச் செய்முறையின் போது பணத்திற்கான பெறுமதியைப் பேணுவதற்கும் விலைமனு ஆவணங்களை மீளாய்வு செய்யும்போது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

3.4 குறைவாகப்பயன்படுத்திய வளங்கள்

	கணக்காய்வு விடயம்	**முகாமைத்துவத்தின் பதில்**	**கணக்காய்வாளரின் பரிந்துரை**
(அ)	பொதுவாக பல் நிதி வசதியின் கீழ் நேரத்திற்கு நேரம் பல கிளைகளிடமிருந்து முழு கடன்தொகையும் நன்கொடையாளரிடமிருந்து பொதுவாக விடுவிக்கப்பட்டிருந்தது. நன்கொடையாளர் அவர்களுடைய முறையான வழங்கல் முறைமையின் பிரகாரம் மூன்று கிளைகளின் கீழ் ஐ.அ.டொலர் 900 மில்லியனில் ஐ.அ.டொலர் 500 மில்லியனை 2021 இற்கு முன்னர் விடுவித்தது. 2021 ஒக்தோபர் 06 இல் உள்ளவாறு 3580 – எஸ்ஆர்ஐ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் முடிவுறுத்தப்பட்ட போதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீதி ஐ.அ.டொலர் 60 மில்லியனில் ஐ.அ.டொலர் 139,761.22 தொகை கடன் முடிவடைவதற்கு முன்னர் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	3580 – எஸ்ஆர்ஐ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் குறைந்துசெல்லப்பட்ட தொகையான ஐ.அ.டொலர் 59,860,238.78 தொகையுடன் முடிவுறுத்தப்பட்டது.	நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் கடன் வசதியினை பயன்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட வேண்டும்.
(ஆ)	நாட்டில் 2021-2023 இன் போது நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக நன்கொடையாளருக்கு கடன் நிதிகள் வழங்கல் நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர், ஏற்கனவே தொடங்கப்பட்ட மற்றும் முழுமையடையாத வீதிப் பிரிவின் முக்கியமான பணிகளை மேற்கொள்வதற்கும், தொடங்கப்படாத வீதிகளைப் பராமரிப்பதற்கும், ஐவீதி மற்றும் இந்த திட்டங்கள் இரண்டிற்கும் தொடர்புடைய முந்தைய பணிகளுக்கான கட்டணத்தை செலுத்துவதற்கும், 2023	நிதி வரையறைகள் காரணமாக பெரும்பாலான ஒப்பந்தங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டன. ஒப்பந்ததாரர்களின் அனுமதியுடன் நிலுவையில் உள்ள ஐபிசிக்கள், பிடித்துவைத்தல் பணம் போன்றவற்றை செலுத்துவதன் மூலம்	பிணைமுறிகளைப் பணமாக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் முறையான விசாரணை நடத்தப்பட்டு இழப்பை மீட்டெடுக்க வேண்டும்.

	ஒக்தோபர் 09 திகதியிட்ட 23/1830/608/070-II ஆம் இலக்க அமைச்சரவை அனுமதியின் கீழ், நிகழ்ச்சித்திட்டத்தின் 4வது பகுதியின் கீழ் ஐ.அ.டொலர் 60 மில்லியனை வழங்குவதற்கான ஒரு முக்கியமான பணி கடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அமைச்சரவைக் குறிப்பின்படி, 1019 முழுமையடையாத வீதிகளில் முக்கியமான பணிகள் திட்டத்திற்கு மாற்றப்பட்ட 804 கிராமப்புற வீதிகள் மற்றும் 11 தேசிய வீதிகளை மறுசீரமைக்க முடிவு செய்யப்பட்டது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 6,454.95 மில்லியன் அளவிலான ஆரம்ப முற்பணங்கள் நிலுவையில் இருந்தபோதிலும், நிறுத்தப்பட்ட பொதிகள் மற்றும் முக்கியமான பணிகள் திட்டத்தில் சேர்க்கப்படாத பொதிகளில் முறையே ரூபா.1,445.06 மில்லியன் மற்றும் ரூபா. 692.71 மில்லியன் தொகையில் நிலுவையில் உள்ள ஆரம்ப முற்பணங்களை வசூலிக்க மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	முற்பணங்களை மீட்டெடுப்பதற்கான ஒரு வழிமுறையை உருவாக்குவதற்காக பிஎம்யூ ஒப்பந்ததாரர்களுடன் பலமுறை கலந்துரையாடல்களை நடாத்தியது.	
(இ)	நிகழ்ச்சி திட்டத்தின் பகுதி 4 இற்காக 2023 நவம்பர் 28 இல் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ஏற்கனவே தொடங்கப்பட்ட சிரமமான வேலைகளிற்கும் சமூகமளிப்பதற்கும் முடிவடையாத வீதி பிரிவு, மற்றும் முன் மேற்கொள்ளப்பட்ட வேலைக் கொடுப்பனவு போன்றவற்றிற்கும் இரண்டு ஐ வீதி நிகழ்ச்சித் திட்டங்களிற்காக ஐ.அ.டொலர் 60 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அந்த ஐ.அ.டொலர் 60 மில்லியனில் ரூபா 10,294.06 மில்லியனிற்கு சமனான் ஐ.அ.டொலர 33.56 மில்லியன் மாத்திரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் வழங்கப்பட்டிருந்தது. அதில், ரூபா.4,594.82 மில்லியன் தொகை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐவீதி நிகழ்ச்சித்திட்டத்தின் சிவில் வேலைகளுக்காக செலவழிக்கப்பட்டிருந்தது.	ஏடீபீயால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட வழங்கல் திட்டம், பாதீட்டு கட்டுப்பாடுகள் மற்றும் முக்கியமான பணித் திட்டத்தின் படி, பகுதி 4 கடனின் வருமானத்தை வழங்குதல் மற்றும் பயன்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டன.	மேலதிகச் செலவைத் தவிர்க்க கடன் வருமானத்தை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்.

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வு பரிந்துரை
(அ)	2023 யூலை 13 இல் பிரசுரிக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை பொது செலவீன மீளாய்வு குழுவின் (பீஆர்சீ) அறிக்கையின் பிரகாரம் முன்வரும் இடைக்கால காலப்பகுதியின் போது இடைநிலை வரையிலும் நிகழ்சித்திட்டத்தால் ஏற்கனவே தொடங்கப்பட்ட புனரமைப்பு வேலையை பூர்த்தி செய்வதற்கு குழுவிற்கு சிபாரிசு செய்யப்பட்ட போதும் மேற்கூறப்பட்ட குழு தீர்மானத்திற்கு முரணாக 9.02 கிமீ நீளத்துடன் கம்பஹா மாவட்டத்தில் இன்னும் தொடங்கப்படாத வேலைகளையும் உள்ளடக்கி ரூபா 321.71 மில்லியன் மதிப்பிடப்பட கிரயத்தில் 04 புதிய வீதிகளை புனரமைப்பதற்கு (தொடப்படாத வீதிகள்) நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது.	மூன்று வருடங்களுக்குள் தொடங்காத வேலைகள் 2020 இல் ஐ-வீதி நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனைத்து வீதிகளும் கையளிக்கப்பட்டதுடன் பழுதடைந்திருந்தது. இந்த நிலைமையால் அத்தகைய வீதிகள் முக்கிய வேலைகளின் கீழ் இருக்கவேண்டியிருந்தது.	குழுவின் பரிந்துரைகளைப் பின்பற்றி, முறையான அதிகாரம் இல்லாமல் புதிய கிராமப்புற வீதிகளை தேர்ந்தெடுப்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.
(ஆ)	**சுயாதீன ஆலோசகர்களின் நியமனம்** ஆலோசனை ஒப்பந்தத்தின் பந்தி 32 க்கு மாறாக, 2024 யூன் 06 இல் ஒரு ஐரி அதிகாரி சுயாதீன ஆலோசகராக நியமிக்கப்பட்டதுடன் கிழக்கு மாகாண வீதி மறுசீரமைப்பு ஆலோசனை நிறுவனத்தில் செயற்திட்ட அமுலாக்க ஆலோசனை-05 இன் இடைக்கால கட்டணச் சான்றிதழ்களிலிருந்து 2024 யூன் தொடக்கம் ஆகஸ்ட் வரையிலான காலத்திற்கு ரூபா. 499,500 தொகை ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொடர்புடைய அதிகாரி அமைச்சகத்தின் செயலாளர் அலுவலகத்தின் கடமைகளில் இணைக்கப்பட்டார். மேலும், இந்த அதிகாரி 2024 செப்தெம்பர் 09-14 வரை இந்தியாவில் நடத்தப்பட்ட கிரேட்டர் கண்டி மல்டி-மாடல் போக்குவரத்து மையத்தில் பைலட் செயற்திட்டத்தின் பயிற்சித் திட்டத்திற்கு உயர் மட்ட அதிகாரியாக பங்கேற்றார்.	நியமிக்கப்பட்ட ஐரி அதிகாரி ஒரு சுயாதீன ஆலோசகர் அல்ல. ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் திட்ட அமுலாக்க ஆலோசகருக்கும் இடையிலான ஆலோசனை ஒப்பந்தத்தின் கீழ் அவர் ஒரு முக்கிய நிபுணரல்லாதவராக நியமிக்கப்பட்டுள்ளார்.	வசதி நிர்வாக கையேட்டின்படி செயல்பட வேண்டும் மற்றும் இந்த முரண்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.
(இ)	கடன் வழங்கும் நிறுவனத்தின் 2023 மார்ச் முதல் மே வரையிலான விசேட செயற்திட்ட நிர்வாகப் பணிக்குப் பிறகு,	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின்படி,	புதிய நியமனங்களை ஏற்றுக்கொள்ளாத அலுவலர்களுக்கான

வரையறுக்கப்பட்ட அடுத்தடுத்த தவணைகளுக்குள் முக்கியமான மற்றும் அத்தியாவசியமான நிலுவைத் வீதிப் பணிகளைத் தொடர்வதில் நிகழ்ச்சித்திட்டத்துடன் முன்னேற ஒரு வழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி, நன்கொடையாளர் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 60 மில்லியன் மதிப்புள்ள 4வது தவணையை செயலாக்கியதுடன் அதற்கான கடன் ஒப்பந்தம் 2023 நவம்பர் 28 அன்று கையெழுத்தானது. இந்தத் தவணைக் கடன் 2023 திசெம்பர் 04 அன்று அமுலுக்கு வந்தது. 2024 மார்ச் 15 திகதியிட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை வழங்கிய அறிவுறுத்தல்களின்படியும், அமைச்சகச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 2024 சனவரி 03 ஆம் திகதியிட்ட DMS/7777/IROAD-III ஆம் இலக்க அதன் கடிதம் மூலம் மேலும் விளக்கப்பட்டபடியும், நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பல வீதி மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளதால், செயற்திட்ட ஊழியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 60 மில்லியன் நிதி மதிப்பின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. மேலும், இந்தத் செயற்திட்டங்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் இதுவரை அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் பிரிவு இரத்து செய்யப்பட்டு, அதற்கான புதிய அனுமதியைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் செய்யப்பட்ட நியமனங்கள், நிகழ்ச்சிதிட்ட ஊழியர்களின் அனைத்து சேவை ஒப்பந்தங்களும் 2023 திசெம்பர் 31 அன்று முடிவடைந்தன. வரிசை அமைச்சகத்தின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) 2024 மார்ச் 31 வரை ஊழியர்களின் சம்பளத்தை வழங்க அனுமதி அளித்தார். முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2024 மார்ச் 04 ஆம் திகதியிட்ட DMS/7777/IROAD-III ஆம் இலக்க கடிதம் மூலம் புதிய பணியாளர்களை அங்கீகரித்திருந்தாலும் மேலும் 06 செயற்திட்ட பொறியியலாளர் பதவிகள் (PS 4 பிரிவின் கீழ்) மேலதிக செயற்திட்ட மதிப்பு ஐக்கிய அமெரிக்க டொலர 250 அல்லது அதற்கு மேல் இருந்தவை ஐக்கிய அமெரிக்க டொலர் 60 மில்லியனாக குறைக்கப்பட்டது. அதன்படி, ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பெரும் அளவில் குறைக்கப்பட்டது. பொறியியலாளர்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் நன்மைக்காக ஐ வீதி I மற்றும் II பணிகளைத் தொடர்கின்றனர்.

சம்பளக் கொடுப்பனவு மீது விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டும்.

	அனுமதி 2024 யூன் 05 ஆம் திகதியிடப்பட்ட DMS/7777/IROAD-III மூலம் வழங்கப்பட்டன. அந்த நியமனங்கள் அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. தாபன விதிக்கோவையின் இரண்டாம் அத்தியாயத்தின் பின் இணைப்பு 4 இன் படி எந்தவொரு நியமனமும் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் என்றாலும், புதிய பதவிகளை ஏற்காத 12 அதிகாரிகளுக்கு 2024 ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான மாதங்களுக்கு செயற்திட்டக் கொடுப்பனவாக ரூபா. 4.51 மில்லியன் தொகையை இந்த நிகழ்ச்சித்திட்டம் செலுத்தியுள்ளது.		
(ஈ)	வீதி புனரமைப்பு வேலைகளின் போது உரிய காணி உரிமையாளர்களால் செயற்திட்டத்திற்கு 4,075 காணி நிலங்கள் கையளிக்கப்பட்ட போதும், உரிய அனுமதி கடிதங்கள் மற்றும் 2,752 காணி நிலங்களின் ஏனைய ஆவணங்கள் மாத்திரம் உரிய உள்ளூர் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இத்தகைய காணிகளை நன்கொடையளிப்பது தொடர்பில் பீஎம்யூ முறையான கையளிப்புச் செய்முறையை அறிமுகப்படுத்தி அமுல்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	பூர்த்தியாக்கப்பட்ட வீதிகளுடன் கையளிக்கப்பட்ட நிலங்கள் தொடர்பிலான ஆவணங்கள் உரிய உள்ளூர் அதிகார சபைக்கு கையளிக்கப்பட பிரேரிக்கப்பட்டது.	உள்ளூர் அதிகார சபை முறையான காணி சுவீகரிப்பு செய்முறையுடன் இணங்குவதற்கு ஊக்கவிக்க வேண்டும்.

3.6 ஆலோசனை சேவைகள்

நிகழ்ச்சித்திட்டம் 2022 சனவரி 03 இல் பிரதானமாக வீதி பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தை (RMTF) விரிவுபடுத்துதல், உள்ளூர் வீதி பராமரிப்புக்கான ஆர்டீஏ இன் பொறுப்பை விரிவுபடுத்துதல் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்திற்கான விரிவான கணக்கீட்டு மற்றும் நிதிக் கையேட்டை உருவாக்குதல் தொடர்பான ஆலோசனைகளைப் இது தொடர்பில் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 8.2 மில்லியன் பெறுமதியில் பொது நிர்வாக நிபுணருடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் இது தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்றன.

இல.	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரை
(அ)	மேற்கூறிய ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தத்தின்படி, இது 2023 யூன் இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும், மேலும் பொது நிர்வாக நிபுணருக்கு ரூபா. 5.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், ரீஓஆர் இன் படி தொடக்க அறிக்கை மற்றும் கணக்கியல் மற்றும் நிதி	பொருளாதார நெருக்கடி மற்றும் பகுதி 4 கடனுக்கான பேச்சுவார்த்தை செயல்முறை தற்காலிகமாக நிறுத்தப்பட்டதன் கீழ், ஆலோசனைக்கான கட்டணத்தை நிறுத்த முடிவு	குறிப்புரை நிபந்தனைகளுடன் இணங்காமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	முகாமைத்துவ கையேடு மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது.	செய்யப்பட்டது.	
(ஆ)	குறிப்புரை நிபந்தனைகளின் படி, இந்த கையேட்டை செயல்படுத்துவது குறித்து நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முகாமைத்துவ ஊழியர்களுக்கு ஆலோசகர் முறையான பயிற்சிகளை வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், மேற்கண்ட தேவை ஆலோசகரால் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டது.	கொள்கை அளவீடுகள் மீதான இறுதி அறிக்கை மற்றும் காலாண்டுரீதியான செயன்முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	குறிப்புரை நிபந்தனைகளுடன் இணங்காமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	பொது நிர்வாக நிபுணருக்கு ரூபா 5.17 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இது ஒப்பந்த பெறுமதியின் 63 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொகை செலுத்தப்பட்டிருந்தபோதும் அரச இயலளவின் மதிப்பீடு, செயல்நடவடிக்கைத்திட்டம் மீதான அறிக்கை, கொள்கை அளவீடுகள் மீதான இறுதி அறிக்கை மற்றும் காலாண்டுரீதியான செயன்முன்னேற்ற அறிக்கைகள் குறிப்புரை நிபந்தனைகளின் (ரீஓஆர்) பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஒப்பந்தத்தின் பூர்த்தியாக்கல் இலக்குகளின் பூர்த்தியாக்கலிலுள்ள காலதாமதத்தால் பூர்த்தியாக்கல் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் வினைத்திறன்களானது கணக்காய்வில் சந்தேகத்திற்கிடமாகவுள்ளது.	விபரிக்கப்பட்டவாறு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான தொகை ரூபா 5.17 மில்லியனாகவிருப்பதுடன் மேலதிக தொகையொன்று செலுத்தப்பட்டிருக்கவில்லை.	குறிப்புரை நிபந்தனைகளுடன் இணங்காமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.